3. அறிவிப்புகள்.

(அ) கேள்வி நேரம் முடிவுற்றவுடன் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குறித்த நடைமுறைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. வினா நேரம் முடிந்ததும் பல உறுப்பினர்கள் சில செய்திகளை எழுந்து பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள், முனைகிறார்கள். இது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதுகுறித்து ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவை நான் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். நேற்று அவை முடிந்த பிறகு, இன்று அவை தொடங்குவதற்குள் ஏதேனும் உடனடியாக உணர்த்தப்படக் கூடியவை அல்லது உணர்த்தித்தான் ஆக வேண்டும் என்பது போன்ற இன்றியமையாத செய்திகள் மட்டும் என்னுடைய இசைவைக் கேட்காமல் எழுப்பப்பட்டால் கூட உடனடியாக அதற்கு அனுமதி வழங்கப்படும். ஆனால் முன்கூட்டியே சிலபேர் சில செய்திகளைச் சொல்லி அனுமதி கேட்கும் மரபும் இருக்கிறது. இரண்டுக்கும் அனுமதி வழங்கப்படும். அது இல்லாமல் ''சீரோ அவர் (Zero-hour)'' முடிந்த உடனேயே ஏதாவது சில பிரச்சினைகளை ஓய்வாகப் பேசிக்கொண்டு இருக்கலாம் என்ற உணர்வு தோன்றி விடுமானால் இன்றைய அலுவல்கள் மட்டுமல்லாமல் என்றைய அலுவல்களையும் முழுமையாக முடிக்க முடியாது என்பது மட்டுமல்லாமல் மொத்தத்தில் பல பேச்சாளர்கள் பேச விரும்புவதால் அவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லி முடிகிறபோது கிட்டத்தட்ட $2\frac{1}{2}$ மணிக்கு மேலே தாண்டி விடுகிறது. பிற்பகல் மறுபடியும் அவைக்கு வருகிறபோது இடைவெளி நேரக் குறைவு ஏற்பட்டு விடுகிறது. எனவே இவற்றையும் கவனத்தில் கொண்டு இன்றைக்கு செய்தித் துறை, தொழிலாளர் நலத் துறை போன்ற மானியக் கோரிக்கைகள் வருவதால் அதில் அதிகம் பேர் பங்கு கொண்டு தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற வாய்ப்பினை நீங்கள் உருவாக்க வேண்டும். இதுபோல நேரத்தை ஒவ்வொருவரும் இறுக்கமாகக் கடைப்பிடித்தால் அவையைச் சிறப்பாக நடத்திச் செல்லலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

4. தகவல் கோரல்.

(அ) வறட்சி நிவாரணம் குறித்து அரசின் நடவடிக்கைகள்.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது தமிழகத்தில் கடுமையான வறட்சி நிலவிக் கொண்டு வருகிறது. குடிநீர்த் தட்டுப்பாடும், வேலை வாய்ப்பு

இல்லாத நிலைமையும் இருக்கிறது. சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, பல்வேறு தீர்மானங்களைப் போட்டிருப்பதாக அறிகிறோம். அது இந்த அவையிலே ஓர் அறிக்கையாகத் தாக்கல் செய்யப்படுமா? மக்களுக்கு என்ன செய்ய இருக்கிறோம் என்பதை இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கின்ற அளவுக்கு ஒரு நல்ல அறிக்கையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, வறட்சி ஆங்காங்கு தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறதென்ற உடனே தமிழக அரசின் சார்பாக 23 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, ஆங்காங்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் குறிப்பிட்டவாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாட்டை அண்மையிலே கூட்டி, அந்த மாநாட்டிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் மத்திய அரசின் உதவியை நாம் எதிர்பார்த்தாலும்கூட, அந்த உதவிக்காகக் காத்திராமல், ஆனால் வருமென்று எதிர்பார்த்து, மேலும் ஒரு 15 கோடி ரூபாயை மாவட்டங்களிலே வறட்சிப் பணிகளுக்காகச் செலவிட, அவர்களுக்கெல்லாம் அந்தப் பணம் ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் உடனடியாக நடைபெற வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்த பிறகு நானும், மற்ற அமைச்சர்களும், மற்றும் முக்கிய அதிகாரிகளும் வறட்சிப் பகுதியாக உள்ள இடங்களுக்கு எல்லாம் சுற்றுப்பயணம் செய்து, வறட்சிப் பணிகளைத் தீவிரமாக முடுக்கிவிட வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. இதைவிட மேலும் ஆதாரங்கள் இருக்குமானால், நண்பர் உகம்சந்த் போன்றவர்கள் உதவுவார்களேயானால், அந்த ஆதாரங்களின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ). தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று திருவாடானையில் நடைபெற்ற இலவச அரிசி வழங்கும் விழா ஏற்பாடுகள் குறித்து.

திரு. கே. ஆர். இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இலவச அரிசி வழங்கும் விழா திருவாடானையில் 14-4-1989 அன்று நடைபெற்றது. இந்த விழாவிற்கு அரசுத் துறையான கூட்டுறவுத் துறை அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். வரவேற்பு இதழில், தலைவராக கே. ஆர். இராமசாமியாகிய என்னையும், முன்னிலை என்று மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களையும், அரிசி வழங்குவதற்கு ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவருமான திரு. எஸ். முருகப்பன் அவர்களையும் போட்டு, அழைப்பிதழை வெளியிட்டிருக்கிறார்கள்.